குயில்

கிழமை இதழ்

ஆசிரியர் :

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 24-6-58 செவ்வாய் | இசை: 4

பகை ஒழிய வருவாய்!

அளவி லாவயல் நீர்வள மேவிய
விளைவு சேர்தமிழ் நாடதி லேபிடி
அரிசி தேடிஐ யோவென ஓடினர் — இதுகாலை

இளைய காளைக ளோமனம் வாடினர்
மகளி ரோஅறம் மாறினர் நாவலர்
இயலி லேஇசை நாடக நூலினில் — உரைகாணர்

தெளிவு சேர்தமிழ் நூல் அழி வானது
பெரிய வாழ்வினி லேகுறை மேயது
திரிவில் வேன்மற வோர்இலை யாயினர்—விரைவாய்நீ

ஒளிசெய் நாவினிலே தமிழே! எம
துயிரிலே உறைவாய் தமிழே! பகை
ஒழிய வேவரு வாய்தமிழே! எமை — உடையாளே!

★

புதுச்சேரி, தி. வ. ஆ கககூஅகூ ஆனி மீ.

-அண்மையில்-

சென்னையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல்

அவள்...!

பாருக்கோர் புதுமை
மாதர்க்கரசி அவள்

பார்க்கும் பார்வை தன்னிலே — வந்து
பாயும் காதல் மின்னலே!

அவள், வார்த்தை ஒவ்வொன்றுமே
நேர்த்தி மட்டுமல்ல

நறுக்கிப் பிழிந்தநற் கன்னலே!

நேருக்கு நேரிரண்டு
கெண்டைகண் டேன்நெற்றி

நீராழி மண்டபத்தில் — அதற்
கப்புறம் ஓர்புறத்தில் — கடும்

போருக்குப் பாரை
அழைக்க வளைத்தஇரு

புருவங் கண்டேன் திறத்தில்!

பவழ மோ, கோவைப்
பழமோ, மின் னற்பிழம்போ

பாவை இரண்டுதடுமே! — உண்டால்
சாவையும் நீக்கிவிடுமே! — அங்கே

தவழும் ஒளிச்சிரிப்பைத்
தான்கண்டால் என்உள்ளம்

பேரின் பத்தைத் தொடுமே!

நுண் இடையும் அன்னம்போன்ற
நடையும் நிறையமடை

உடையும் அழகின்பெருக்கா? — இவை
கடையில் விற்கும் சரக்கா? — மேல்

உடைஎன்று மின்னுடுத்தி
உலவிடும் தங்கத்தேர்

எனக்கல் லாமற் பிறர்க்கா?

மொழி வெறியா கூடாது?

"மொழிவெறி கூடாது" என்று மொழிந்தார்
உமிழத் தக்க உளறுவாய்க் கக்கன்!
சொன்ன இச்சொல் தமிழர்க்குச் சொன்னசொல்!
"என்னசொல் கின்றோம்" என்றெண் ணாமல்
சொல்வது கக்கனின் தனித்த சொத்தே!
போற்றி வாழும் இத் திருப்போற்றி யார்க்குச்
சோற்றுக் கெவரையும் போற்றத் தோன்றும்.

"வடவரைப் போற்றினால் வாழலாம்; தமிழக்
கடையரைப் போற்றினால் ஒன்றும் காண்கிலோம்"
என்பது கக்கன் குறிக்கோள் என்க.

"தின்பது சாவது"– எனும்சிறு கொள்கை
கக்கன் பிறக்கையில் ஒக்கப் பிறந்தது.

தமிழும் உயிரும் உடம்பும், தமிழன்!
இந்த மூன்றில் எதுகுறைந் தாலும்
தமிழன் இருப்பினும் செத்தவன் தானே!

நல்லறி வுலகைக் கேட்டால் நவிலும்:
ஒருநாட்டுக்கு மொழிவெறி உயிரென்று!
நல்லறி வுலகைக் கேட்டால் நவிலும்:
ஓரினத்திற்கு மொழிவெறி உணர்வென்று!
அடிமை நாய்கள் இதனை அறியா!
மானமி லார்இதை எண்ண மாட்டார்!
கழுகும் காணா மறுக்கும்
அழிவுறு கட்டை திருந்துதல் எங்கே!

அவள் புன்னகை

நூறா யிரமும்என் நோய்போக் காது
பேறெனில் அவளன்பு பெறுவ தாகும்
அன்னவள் புன்னகை மின்வி ளக்கு,
மன்னும்என் காதல் வாழ்வுக்குப் போதுமே!

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

காவியம், காப்பியம்

இவை இரண்டுசொற்களும் ஒரே பொருள் உடையவை. இவை வட சொற்கள் என்று கூறிப் பிழைப்பர் பார்ப்பனரும் அவர் அடி நத்துவாரும்.

காத்தல், காப்பு இவை இரண்டும் தொழிற் பெயர்கள். முன்னதில் தல் தொழிற்பெயர் இறுதிநிலை. பின்னதில் பு தொழிற்பெயர் இறுதிநிலை.

இந்த இரண்டு தொழிற்பெயர் இறுதிநிலை கட்குப் பதிலாக அம் என்ற இறுதிநிலை பெற்றுக் காவம், காப்பம் என வரின் அது பிழையாகாது. எனவே, காவம் காப்பம் என்ற இரு தொழிற் பெயர்களும் இடையில் இகரச்சாரியை பெற்று காவியம் காப்பியம் என வந்தன என அறிதல் வேண்டும். இது எதுபோல எனில் ஓவம் என்பது இகரச்சாரியை பெற்று ஓவியம்என வந்தது போல என்க.

நெஞ்சைப் பயனற்ற வழியிற் செல்லாது நன்னிலைப் படுத்திக்காப்பது காப்பியம் காவியம் எனப் பொருள்பட்டுக் காரணப்பெயர்களாகிய வாறு காண்க.

காவியம் காப்பியம் வடமொழி இலக்கியத் திலும் வருவதால் அவை வடமொழியே எனக் கூறுவாரை நோக்கி, உங்கள் வடமொழி இலக் கியத்தின் ஆண்டு என்ன? சொற்கள் உங்கட்கு ஏது? நீங்கள் இந்த நாட்டுக்கு வரும்போதே எல்லாச் சொற்களையும் கொண்டு வந்தீர்களா? என்று கேட்கவேண்டும்.

எல்லாச் சொற்களையும் நாங்கள் கொண்டு வந்தோம் என்று அவர்கள் கூறினால், இமையம என்ற சொல்லை வரும்போதே கொண்டு வந்தீர்கள் எனில், நீங்கள் இருந்த இடத்தில் இமையம் என்ற மலை இருந்திருக்கவேண்டுமே - இருந்ததா என்று கேட்கவேண்டும்.

இமையம்

இமைத்தல் - ஒளித்தல், இமையமலை பனி மூட்டத்தால் ஒளிசெய்தலால் அப் பெயரிட்டு அழைத்தார்கள் பண்டைத் தமிழர்கள்.

எனவே, காவியம் காப்பியம் இமையம் என்பன செந்தமிழ்ச் செல்வங்களே! வந்தவர் மொழியல்ல என நெஞ்சில் நிறுத்துக.

வேதம்

வேதம் வந்தவர் மொழியன்று.

வேய்தல்—மறைத்தல். வேதல் என மருவி யது. வேய்ந்தான் என்பது வேய்ந்தன் என மருவியதுபோல, பின் வேதல் என்பது வேதம் என ஆனது ஈறுதிரிந்ததோர் ஆகுபெயர். கபிலம் என்பதிற்போல.

வேய்ந்தன் என்பதில் வேய்தல் எனின் கொற்றக் குடையால் மறைத்துக் காத்தல் என்று கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு மறைமலையடிகளும் உரைத்தார் எனவே. வேதம் செந்தமிழ்ச் சொல்லே எனக் கொள்க.

மானம்

மன்னல் தொழிற்பெயர். மன் ஈறுகெட்ட தொழிற்பெயர். அதாவது முதனிலைத் தொழிற் பெயர். மான் முதனிலை திரிந்த தொழிற்பெயர். அது முதனிலைப் பொருள் இறுதிநிலையாகிய அம் பெற்று மானம் என ஆயிற்று.

மேற்சொன்ன மன்னல் அதாவது மன்னு தல் என்றால் தன்னிலையில் மாறாது நிற்றல் என்பது பொருள்.

அதனால்தான் மானம் என்பதற்குப் பொருள் கூறிய தமிழ்ச் சான்றோர் தன்னிலையில் மாறாது நிற்றலும், மாற்றம் நிகழ்ந்துழி வாழாது சாதலும் என்று பொருள் கூறிச்சென்றார்கள்.

"திப் பார்ப்பனர்களும்" தேப்போமீக்களும் இதை வடசொல் என்று தமக்குத் தோன்றிய வாறே கூறி மகிழ்வர். மானம்; உலகம் தோன்றியது முதல் மானத்துக்காக வாழ்ந்து வரும் தமிழரின் தூய தமிழ்ச்சொல் என்க.

ஆதி

ஆதி என்பது வடசொல்லாம். அச்சொல் லும். திருவள்ளுவரின் தாய்க்குப் பெயராம். அந்தத் தாய்கூட ஒரு புலைச்சியாம்.

ஆதி வடசொல்லன்று. தூய தமிழ்ச் சொல்லே, அஃது ஆதல் எனப் பொருள்படும் தொழிற்பெயர். ஆ - முதனிலை தி – இறுதிநிலை செய்தி, உய்தி என்பவற்றிற்போல,

ஆதி–முதன்மை இதை வடவர் மூலப் பிரகிருதி என்பர்.

பகவன்

பகவான் என்று வடவர் சொல்லுகிறார் களே அதுதானும் இது. இது கலப்பில்லாத முட்டாள்தனமான பேச்சு,

பகல், என்பதும் பகவு என்பதும் ஒரே பொருளைய சொற்கள். பகல் என்பதில் பகு முதனிலை. பகவன் என்பதில் பகவு என்பது முதனிலை. பகல் என்பதற்கும், பகவு என்பதற் கும், நடுவுநிலை. அறிவு என்பன பொருள்கள்.

பகவு என்பதற்குப் பாவேந்தர்கள் அன் இறுதி நிலை சேர்த்துப் பகவன் என்று சிறப் புறுத்துவார்கள். எனவே பகவு. பகவன் இவைகட்கு அறிவு. அறிவன் என்பன பொருள்

பகவன் தூய தமிழ்ச்சொல்.

பகவன் வடசொல்லாம் அது திருவள்ளு வரின் தந்தையின் பெயராம். அந்தப் பகவனும் பார்ப்பனனும். ஆதியும் பகவனும், புலைச்சியும் பார்ப்பனனுமாம்.

திருவள்ளுவர் பேரறிஞராகத் திகழ்வதற் குக் காரணம் அவர் பகவன் என்னும் பார்ப்பன னுக்குப் பிறந்ததாகும். இப்படி அந்தப்பாவிகள் ஒரு கதைகட்டி விட்டிருக்கிறார்கள்.

> **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
> **பகவன் முதற்றே உலகு**

என்ற குறளின் முதற்பாட்டில் திருவள்ளுவர் தம் பெற்றோர் நினைவாக அவர் பேர்களாகிய ஆதி. பகவன் என்பனவற்றை வைத்தாராம்.

ஆதி பகவன் என்பது வடசொற்றொடர் என்று பரிமேலழகர் கதைத்தற்குக் காரணம் கண்டு கொள்க.

இன்னொரு முறை கூறுகின்றேன். பகவன் தூய தமிழ்ச்சொல், ★

கவி சொல்ல வாரீர்!

— மான் —

கவி சொல்ல வாரீர் — அமுதக்
கவி சொல்ல வாரீர்
புவி வென்ற தமிழால் — அன்புப்
பொருள் கொண்ட சொல்லால்
நமை வென்ற வாழ்வை — மீட்டு
நாம் வென்று வாழக்
கவி சொல்ல வாரீர் — ஒரு
கவி சொல்ல வாரீர்!

இலை யென்ற கொடுமை — அது
ஏ னென்ற கேள்வி
மலை போன்ற செல்வம் — எதிர்
மடு போன்ற ஏழ்மை
மலை சரிய வேண்டும் — துன்ப
மடு வுயர வேண்டும்
நிலை கெட்ட நெஞ்சில் — அன்பு
நெறி யூட்ட வேண்டும்

வாழ் வென்ற தோணி — வறுமைக்
கட லோடும் போது
பாழ் என்று வீசும் — துன்பப்
படு சூறை மோதத்
தா ளாகி நெஞ்சம் — ஏழை
துடிக் கின்ற காதை
கே ளாது நாடு — இன்பக்
கட லாக வாழ்வு

சுவை சேர்க்க வாரீர் — துன்பச்
சுமை யிறக்க வாரீர்!
நம தருமை நாடு — அது
நம தாக வேண்டும்!
புவி வாழ்வில் இன்பம் — எவர்க்கும்
பொது வாக வேண்டும்!
கவி சொல்ல வாரீர் — தமிழ்ப்
பகை சொல்ல வாரீர்!

முத்துக் குவியல்

தொகுப்பு : ஆ. அ.

சரியான உண்மையைத்தான் நான் கூறுகிறேன் என்று சாதிக்க வரவில்லை; எதை உண்மையென்று கருதுகிறேனே அதையே கூறுகின்றேன்.

★ ★ ★

பழமையை அழிக்கிறவர்கள் புதுமையினை உண்டாக்குகின்றனர்.

★ ★ ★

அறியாமையைத் தவிர்த்து வேருர் அடிமைத்தனம் இல்லை.

அறியாமை துயரத்தின் தாய்.

★ ★ ★

நான் அஞ்சக்கூடிய ஒன்று: நண்பன்தான்'

★ ★ ★

எவற்றையும் மொத்தமாகவே அடைய விரும்புகிறேன். ஆனுல் எவையும் சில்லரையாகவே வருகின்றன.

★ ★ ★

மனிதன்,

எதுவரையில் தன் உழைப்போடு எண்ணத்தையும் கலக்கவிட்டானே;

எதுவரையில் இயற்கைச் சக்திகளோடு பங்கு கொண்டானே;

எதுவரையில் தனது சுற்றுப்புறத்தில் ஏற்பட்ட சாதனங்களைத் தனக்கு இயைந்த அளவில் பயன்படுத்தக் கற்றுக்கொண்டானே,

எதுவரையில் தெய்வ நம்பிக்கையை இழந்து விட்டானே,

அதுவரையில் முன்னேற்றமடைந்திருக்கின்ருன்.

★ ★ ★

வீண் வார்த்தை பேசுவோரது வாயைப் பார்த்துக்கொண்டு வீண்பொழுது போக்காதே!

உனது சூழலுக்குட்பட்டவற்றை நன்குணர்ந்து எது நல்லது என்று உனக்குத் தோன்றுகிறதோ அதைத் துணிந்து செய்!

★ ★ ★

இறப்பு வருங்கால் அதற்கு வருந்துவோரே, நீங்கள் பிறர்க்கு நல்லது செய்தல் இயலாதவராயிருந்தாலும், தீமை செய்யாமல் உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். அதுவே எல்லார்க்கும் மகிழ்ச்சியைத்தருவது, நல்லநெறியுமாவது.

★ ★ ★

கடவுளை மரம், செடி, கொடி, சிலந்தி, யானை முதலியன பூசித்ததாகப் புராணங்கள் புகல்கின்றன, கடவுள் உருவங்களின் மீது ஈக்கள் மொய்க்கின்றன; பல்லிகள் ஓடுகின்றன இவைகட்கெல்லாம் இறைவனைத் தொடும் உரிமையிருக்கும்போது ஆறறிவுடைய மக்களுக்கா அவ் வுரிமையில்லை? உயர் சாதியார் கொடுமை என்னே! என்னே!

★★★

அணிற்பிள்ளைக்குக் கிளிப்பிள்ளை

ஈந்து தந்த இருள்முத் துப்பழம்,
வேம்பு தந்த வெயில்முத் துப்பழம்
இனித்ததேன்? கசந்ததேன்? கிளியே!
இனித்த தேன்? கசந்த தேன் என்றுனர்
[அணிலே!

வெல்க!

என்தாய் நாடே! இன்தமிழ் நாடே!
பொன்னிறக் கதிர்விளை நன்செய் வளத்தினை!
தேன்மலர்ச் சோலையும் தென்னையும் வாழையும்
வானிடை உயரும் மங்காச் சிறப்பினை!
கனியென்று கட்டிக் கரும்பென்று வையத்
தனியென்று செந்நெல் தருவதோர் வளத்தினை!
குன்றாப் பயன்தரு குன்றுகள் உடையை நீ!
இன்றெனாப் புதுப்புனல் ஆறுபாய் எழிலினை!
காடுகள் கழனிகள் ஓடைகள் புள்ளினம்
பாடும் பொய்கை பலப்பல உடையை நீ!
மின்தூங்கு மணிகள் மேவினை மாற்றுயர்
பொன்தூங்கு நிலவறை பொன்றாத் திருவினை!
உலகினை அழைக்கும் ஒளிமுத்துக் கடல்கள்
இலகு பவழ இலக்குகள் உடையை நீ!
இப்பார் எல்லாம் ஏந்துகை நிரப்பும்
உப்பளச் செல்வம் உதவும் திறத்தினை!
உழுவார் மனப்படி மழைபெறும் பேற்றினை!
ஒழியா தசையும் தென்றல் உடையை நீ!
முகத்து நிலவு காட்டி மகளிர்
அகத்திறம் காட்டி ஒழுகும் அழகினை!
நாளை தூக்குக உலகைஎனில் இன்றே,
வாளைத் தூக்கும் மறவர்உன் மக்கள்!
தத்துவ முதல்நூல் உலகுக்குத் தந்தனை!
கத்திலா இலக்கியம் கடலெனக் கண்டனை!
அமிழ்தென ஒருபொருள் உண்டெனக் காட்டும்
தமிழ்உன் மூச்சும் பேச்சும் ஆம்எனில்
என்ன இல்லை உன்பால்?.
அன்னாய், அளப்பரும் பரப்பினை! வெல்கவே!

★

காட்டுக் குறத்தி-
கலப்புத்

தெருவில் குறத்தி : ஐயே! ஐயே...!

தெற்குப் பொதிகைமலை எங்கள் மலைதான் - நல்ல
தென்பாங்கும் நாட்டியமும் எங்கள் கலைதான்!
தக்க தக்க தக்க தக்க என்றாடுவோம் - நல்ல
தாயான தமிழையே கொண்டாடுவோம் !
ஐயே! ஐயே...!

சாதி சனங்கள் என்னை இட்டு வந்தாங்க! - தன்னந்
தனியேஇங் கேஎன்னை விட்டுப் போனாங்க!
வீதியிலே ஆடப்பாட நானே ஒருத்தி - ஐயோ
வெட்கமா இருக்குது நான் சின்ன குறத்தி!
ஐயே! ஐயே...!

(வீதியில் அவளைப் பார்த்துக்கொண்டு நின்ற நாட்டுப் புறத்தான் எதிரில் நெருங்கிக் கூறுகின்றான்.)

வெட்கமென்ன சிக்கிஎன்ன சொல்லடி பெண்ணே! - இந்த
வீதியிலே யாருமில்லை நில்லடி கண்ணே!
சொக்குப்பொடி தூவிவிட்டாய் என்மேலே
சோலைக்கு நீ வாடிஇள மயில்போலே...!
குறப்பெண்ணே...!

குறத்தி :

என்னைவ ளைக்கஇவன் வலைபோட்டான் - நல்ல
இன்பம் பரிமாற இலைபோட்டான்
மின்னல் அடித்ததுபோல் கண்ணை அடித்தான் - காதல்
வேதனையினாலே மனம் துடிதுடித்தான்
ஐயே! ஐயே...!

நீ. நாட்டுப் புறத்தான் - நான்
காட்டுக் குறத்தி !

நாட்டான் :

நாட்டு மக்களில் - வேறு
பாட்டைக் கண்டாயோ ?

குறத்தி :

நாம், கூட்டு வாழ்க்கை வாழுவது
கை கூடுமோ - இந்த
கோதைக்கு நீ மாலையிட
எண்ணிடலாமோ
ஐயே ! ஐயே...!

-நாட்டுப்புறத்தான்

திருமணம்

நாட்டான் :

காதல் கொண்டபின் - நம்மில்
சாதி ஏதடி ?

குறத்தி :

வேதனை தரும் - இந்தச்
சோதனை ஏனோ ?

நாட்டான் :

மாதரசிஉனக் கென்மேல் ஆசையில்லையா ? - உனை
வைத்துப்படைக்க எனக்கு மீசையில்லையா ?
குறப் பெண்ணே...!

குறத்தி : உனக்கு.

ஆடத்தெரிந்தாலும் போதுமே - கொஞ்சம்
பாடத் தெரிந்தாலும் போதுமே - மிக
அரிதாகிய கலை ஒன்றுமே
தெரியாத ஓர் பழிகாரனை
நாடுவதால் என்ன புண்ணியம் ? - உளம்
நத்துவதால் ஏது கண்ணியம் ?

நாட்டான் :

ஆட்டத்திலே ஒரு சேரன்நான் - நல்ல
பாட்டில் சோழ பாண்டியர் பேரன்நான் - நீ
அச்சப்படுவதை விடுவாய்!
ஆசைக் கனிஇதழ் தருவாய் - நம்மைக்
கூட்டியதும் கலைதானடி - நல்ல
கோடையிலே குளிர் தேனடி!

குறத்தி :

எடு - எடு எடு எடு ஒரு புறப் பறை தங்க மாமா !
தட - தட தடவென முழக்கிடுவாய் தங்க மாமா !

நாட்டான் :

கொடு கொடு கொடு கட்டிமுத்தம் புள்ளி மானே ! -நான்
கொள்ளக் கொள்ள இன்பமடி புள்ளி மானே!!

குறத்தி :

விட ஒருநொடி முடியாது தங்க மாமா ! - உனை
விட்டாலுயிர் தரியாது தங்க மாமா !

நாட்டான் :

தட தடவெனப் பாயுதடி இன்பவெள்ளம்
தடங்கடலில் துள்ளுதடி நம்முள்ளம் !

★ ★

வெந்தழலிற் செந்தமிழர்?

"சித்தன்"

கடல்சூழ்தொல் லிலங்கையினிற் றமிழர் கூட்டம்
கல்தோன்றி மண்தோன்றாக் காலந் தொட்டே
படநாகப் புற்றழித்து, நகர மைத்துப்
பயன்மரஞ்சேர் தோட்டங்கள் பலஉண் டாக்கி
அடலேறாய் வாழ்ந்தார்கள்; அவரை இந்நாள்,
அங்குள்ளார் சிங்களவர் விரட்டு கின்றார்:
இடமாகத் தமிழகத்தை வருவார்க் கெல்லாம்
ஈந்தவர்க்கா இந்நன்றி? உலகே சொல்வாய்!

செங்குருதி சிந்துகின்றார் தமிழர் அங்கே!
திருப்பேரை நிலைநிறுத்தப் பொறுமை பூண்டார்!
சிங்களத்தார் வெங்களத்தி லென்றாட் டாரைச்
செயித்ததுண்டோ என்றேனும்? சரிதம் சான்றாம்!
பொங்குசின உள்ளத்தார் கூண்டுட் பட்ட
புலியானார்; வலிகெட்டார் போர்வாள் ஏற்றார்!
இங்கொருநாள் "யாதும் ஊர், யாருங் கேளிர்"
எனச்சொன்ன தமிழர்களா இக்கே டுற்றார்?

இனவெறியும் மொழிவெறியும் அவர்கள் நாட்டை
இருட்காடாய்க் கொடும்பிலமாய்ச் செய்த வந்தோ!
வனவிலங்கு முளநடுங்குஞ் செயல்மேற் கொண்டார்;
வாழ்வாரின் வாழ்வழித்தே வாழப் பார்ப்பார்!
மனமறியக் கொடுமைபல மகிழ்ந்தே செய்தார்;
மற்றதனால் அவர்பெற்ற மதிப்பும் என்னே?
இனப்பற்றும் மொழிப்பற்றும் வேண்டும்: ஆனால்,
இவைவெறியாய் மாறிவிடல் இழிவே கண்டீர்!

தமைநத்தாத் தமிழர்களைச் சிறையுள் ளிட்டார்;
தமிழெதிர்த்தார்; உடைகளைந்தார் என்றே கேட்டோம்!
இமைதிறந்து சிங்களவர் வாழ அங்கே
ஏற்பாடு செய்தவர்கள் இடுக்கண் ஏற்றார்!
சுமையாகத் தமிழரைஇன் றன்னார் எண்ணல்
சுவர்ஏறிப் பின்ஏணி எற்றல் போலாம்!
அமைவுடத்தோ சிங்களவர் செயல்தான்? நன்றே
ஆராய்வீர் நடுநிலைமை உலகத் துள்ளீர்!

செந்தமிழ்

திருச்சி-வாசுதேவன்

கலைவளர் எழிலே எழில்வளர் கலையே
கலையெழில் திகழ்ந்திடும் இன்ப
நிலைவளர் நலமே நலம்வளர் நிலையே
நிலைநலம் வழங்கிடும் பொருளாம்
மலைவளர் மணியே மணிவளர் மலையே
மலைமணி வயங்கிடும் ஒளியாம்
அலைவளர் கடலே கடல்வளர் அலையே
அலைகடல் அனையசெந் தமிழே!

வளம்திகழ் மதியே மதிதிகழ் வளமே
வளமதி நிரம்பிய புலவோர்
உளம்திகழ் நிதியே நிதிதிகழ் உளமே
உளநிதி பெருக்குமெய் வாழ்வாம்
நலம்திகழ் மணமே மணம்திகழ் நலமே
நலமணம் நிறையலைத் தெண்ணீர்க்
குளம்திகழ் குளிரே குளிர்திகழ் குளமே
குளிர்நறுஞ் சுவைவளர் தமிழே!

தோல்வி சொல்லலாகுமோ?

(கோ. கலியபெருமாள்)

வாள்பிடித்த தமிழனின்று
வால்பிடித்துச் செல்கிறான்!
தோள்தடித்த தமிழனின்று
தோல்தடித்து நிற்கிறான்!
கோல்பிடித்த தமிழனின்று
கால்பிடித்துச் செல்கிறான்!
வேல்பிடித்த தமிழனின்று
தாள்பிடித்துச் செல்கிறான்!
மாற்றலர்க்கே அடிபணிந்து
வாழ்ந்திடாத தமிழினம்
மாற்றலர்க்குத் திறைசெலுத்தி
வாழ்வதின்று மேனடா?
அல்லலிங்குத் தமிழ்மொழிக்
கடையும் என்ற போதிலே
வெல்லமென்று உயிர்மதித்தே
வீணாக வாழ்வதோ?
செல்லுவீர்கள் செருமுனைக்குச்
சிறைபுகுந்த போதிலும்
தொல்லுயர் தமிழ்க்குடிக்குத்
தோல்விசொல்ல லாகுமோ?

பெருகும் அன்பு

வியாழன் வீணாய்ப் போன போதிலும்
வெள்ளி மகிழ்ச்சியை விளைத்த போதிலும்
சனியாய் நம்மை வியர்வையால் தாக்கிய
ஞாயிறு தொலைந்ததே நல்ல வாய்ப்பாம்
திங்கள் எழுந்தது திருவுள ஒப்பம்நின்
செவ்வாய் மலரில்என் அன்புதன்
பெய்வாய் மலர ஆறாய்ப் பெருகுமே!

அன்றுபோல் இல்லை...!

— துரை. மாணிக்கம். —

ஓடி ஒளிந்துன் ஒளிமூழ்கி ஒண்டமிழிற்
பாடிக் கதைசொல்லிப் பாங்கியரோ — டாடினமே,
அன்றுபோ லில்லை அணிநிலவே; நீளிரவில்
நின்றிறைக் கின்றாய் நெருப்பு.

வண்ணச்சிற் றாடையொடு வாயிற் குதித்திறங்கி
மண்ணிற்சிற் றில்ல மருங்கமர்ந்தே — உண்ணுவமே
அன்றுபோ லில்லை அணிநிலவே; மூண்டெரிதீக்
குன்றுபோ லானாயோ கூறு.

தேங்கிக் கிடக்கும் இரவின் குளிரொளியில்
தூங்கிக் கிடந்தோமே தண்ணிலவே — ஆங்கதுபோல்
இன்றில்லை; என்னை எரிக்கொழுந்தாய் வாட்டுகின்றாய்
நன்றிதுவோ என் செய்வேன் நான்.

எம்மின் இளையார் இனிய குரல் தாமிசைக்கக்
கும்மி யடித்துவந்த கோதையினுக் கன்று
விருப்பாகி நின்றாயே வெண்ணிலவே! இன்றேன்
நெருப்பாகி நிற்கின்றாய் நீ!

முத்தை இறைத்த முழுநீலக் கம்பளத்தில்
தத்தி நடைபயிலும் தண்ணிலவே! பாலொளியைப்
பாய்ச்சுகின்றா யில்லை பருநெருப்பை வாடையிலே
காய்ச்சுகின்றாய் இன்று கனன்று!

★

நீவிர் எந்தக் கட்சி?

வினு : எந்தக் கட்சி ஐயா ?—நீவிர்
எந்தக் கட்சி ஐயா ?

விடை : எந்தக் கட்சியில் நல்ல கொள்கை
இருக்கின்றதோ மெய்யா

அந்தக் கட்சி ஐயா – நான்
அந்தக் கட்சி ஐயா !

வினு : காங்கிரசு நன்ரு—ஐயா ?
காங்கிரசு நன்ரு ?

விடை : காங்கிரசு காரர் எல்லாம்
காசடிக்கப் பார்ப்பார் !
காங்கிரசு கட்சி எல்லாம்
தீங்கரசு கட்சி !

வினு : சுத்திஅரி வாள் கட்சியை
நத்துவிரோ நீவிர் ?

விடை : நத்துவாரை ஆசை காட்டி
நயவஞ்சகம் செய்யும்
எத்தர்களின் கட்சியிலே
வேலை இல்லை எமக்கே.

வினு : ஏர்காட்டும் கட்சியிலே
இருந்த துண்டோ நீவிர்?

விடை : இருந்ததுண்டு மறுநாளே
பிரிந்து போன துண்டு.
ஆர்போவார் தமிழனை
சீர் அறியாக் கட்சி

வினு : மா. போ. சீ கட்சியிலே
மகிழ்ச்சி யுண்டோ உமக்கே ?

விடை : தாய்பேரைச் சொல்லிக் காசு
தட்டுகின்ற கட்சி !
மா போ சீ என்ருலே
சீ! போ! சீ என்பார் !

வினு : பார்ப்பனரின் கட்சியிலே
பற்றுண்டோ உமக்கே ?

விடை : காப்பான தம் தமிழை
இன்பத்தமிழ் நாட்டைத்
தீர்ப்பாரை நத்துபவர்
செந்தமிழர் ஆகார் !

வினு : நல்ல திரா விடர்கழகம்
பிடிப்பதுண்டோ உமக்கே ?

விடை : நல்ல திரா விடர்கழகம்
மிக நல்ல இயக்கம் !
எல்லோரும் ஒன்றென்று
தொண்டுசெயும் இயக்கம் !

* * வாழ்கதிரா விடர்கழகம் !
வாழ்க தமிழ் நாடு !
யாழும்ஒரு பாய்புலியும்
இவள் என்னும் தமிழ்தான்
வாழ்க ! அறம் வாழ்க ! பெரி
யார் கொள்கை வெல்க !



நீ...?

— ஆ. அழகன் —

தனித்தி ருந்துநான் பெருந்து யர்தனை
தவிர்த்தி ருந்தனை தோழி!
இனித்த நல்லமு தெனக்கு நீஎன
இசைந்தி ருந்தனை வாழி!
குனித்த வில்லினை பிறைநு தற்கு நீ
கொடுத்தி ருந்தனை தேனே!
பனித்த கண்ணெனும் பகழி யை யதில்
தொடுத்தி ருந்தனை மானே!

உளத்த டத்தினில் நிறைந்த அன்பெனும்
உவகை நீர்மிகக் கொண்டே
திளைத்த னன் அதில் எழில்உருக் கொள்நீ
திகழ்ந்தனை என்கற் கண்டே!
இளைத்த என்னுடல் தனக்கொர் வன்மையை
ஏற்றி னை உன தன்பால்
விளைத்த னைமிகக் களிக்கு மின்பத்தை
விருப்ப மோடுநீ என்பால்!

தழைக்கும் வாழ்வினுக் களிக்கும் மேகமாய்த்
தவழ்ந்தி ருந்தனை சிட்டே!
உழைக்கும் ஏழைக்குக் கிடைக்கும் செல்வமாய்
உவந்து கொண்டனன் பட்டே!
அழைக்கு மின்பினை யணைக்கும் போதினில்
அறிவி லார்மதி கெட்டே
இழைக்கு மாத்துயர் அழித்த தோ? எதற்
கெனைப்பி ரிந்தனை விட்டே!

★

ஈழத் திருநாட்டில் தமிழ்ப் பெருமக்கள்.

அநாகரீக மெனும் சேற்றுக் குட்டையில் மக்கள் அமிழ்ந்து அல்லலுற்றுக் கொண்டிருந்த காலத்தில், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர் தத்துவத்தை உலகோர்க் களித்தவன் தமிழன். கல் தோன்றி மண் தோன்றுக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என்ற பெருமைக்குரிய தமிழன் இடை வந்த வந்தேறிகளால் அவிழ்த்து விடப்பட்ட ஆண்டவன், அவதாரம், சாதி, சமயம், புண்ணியம், பாவம் என்னும் புளுகு மூட்டைகளுக்கு அடிமையாகித் தன் இனம், மொழி, நாடு, பண்பாடு, கலை ஆகியவற்றை மறந்தான். அதன் பயனாய் மாடோட்டி வந்த நாடோடிகள் நாடாளத் தொடங்கினர். வாள் பிடித்து வையமாண்ட தமிழன், வந்தேறிகளின் தாள் பணிந்து வயிற்லறக் கழுவிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல வறுமையின் கொடுமை அவனை வாட்டவே கடல் கடந்து சென்று காடு வெட்டிக் கழனி திருத்தி மானத்தோடு வாழத்தொடங்கினான். இப்படி அவனின் உடலுழைப்பால் உருப்பெற்ற நாடுகளுள் முன்னணியில் நிற்பது இலங்கை.

கைகளும் கால்களும் சோர்ந்து விழ, நெற்றி வியர்வையை நிலத்திலே கொட்டி மேடு பள்ளத்தைச் சீர் செய்து காடு திருத்தி, வளங்கொழிக்கும் நாடாக எந்த ஈழத்தை அமைக்கப் பாடுபட்டானோ அந்தத் தமிழ்ப் பெருமகனைப் பார்த்துத்தான் "பறத்தமிழா ஓடு ஓடு" எனறு பண்டார நாயகாக்கள் ஓலமிடுகிறார்கள்.

கடந்த ஒரு திங்களாக ஈழத் திருநாட்டில் தமிழ்ப் பெருமக்கள் சுட்டுக்கொல்லப்படுகின்றனர்; அவர்கள் கடைகள் தீக்கிரையாக்கப் படுகின்றன; சொத்துக்கள் கொள்ளையடிக்கப் படுகின்றன; தாய்மார்களின் கற்பு சூறையாடப்படுகிறது; அவர்களின் கச்சையைக் கழற்றி முதுகில் "சிங்கள சிறீ" என்ற எழுத்து பொறிக்கப் படுகின்றது. அங்காடி விளம்பரப் பலகைகளில் காணப்படும் தமிழ் எழுத்துக்கள் தார் பூசி அழிக்கப்படுகின்றன. கொழும்பு முதலிய இடங்களில் வாழும் தமிழ்ப் பெருமக்கள் வலுவில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். தமிழர் தலைவர்கள் அவரவர் வீடுகளில் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர் என்கின்ற செய்திகளைப் படிக்குந்தோறும் நெஞ்சம் கொதிக்கிறது;

தமிழ் இனத்தை அடியோடு ஒழித்துக்கட்டும் இத்தகு பணியில் சிங்கள வெறியர்களும், "புத்தம் சரணம் கச்சாமி" என்று கூறித்திரியும் சிங்களப் போலிப் பௌத்த பிட்சுக்களும் முனைந்து நிற்கின்றனர். இந்நிலையில் அவதியுறும் தமிழர்களுக்கு ஆதரவாகப் பண்டிதர்களால் ஒரு சொல் கூடக் கூற முடியவில்லை.

அதற்கு மாறாக எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றுவதுபோல தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் இராசராம் நாயுடுவும் கூலிக்கு மாரடிக்கும் பி. சோ. கட்சியைச் சேர்ந்த சின்னதுரையும், "தமிழர்கள் இலங்கையில் அவதியுறுவதற்குக் காரணம் சிங்களர்களல்லர்; தமிழர்களே" என்று கூறியிருக்கிறார்கள். தங்களைப் பெரிய அரசியல்மேதைகளாக எண்ணிக்கொள்ளும் மற்றும் சில கதருடைக் கருணாமூர்த்திகள் "இது இலங்கையின் உள்நாட்டு விவகாரம்" என்று மானமிழந்து கூறித்திரிகிறார்கள்.

நேற்று இதே கதருடையினர், தென்னாப்பிரிக்காவில் மலான் சர்க்காரால் கையாளப் பட்டுவரும் நிற வெறியைக் கண்டித்து இமயம் முதல் குமரி வரை பொதுக்கூட்டங்கள் நடத்தினர்; பாராளுமன்றத்தில் கேள்விகள் கேட்டனர். இந்தியத் தூதுவரும் மலானின்போக்கைக் கண்டிக்கும் வகையில் ஐ. நா. வில் அலறினார்.

ஆனால் இன்றோ ஈழத்தில் சிங்கள வெறியர்களால் நடத்தப்படும் காலித்தனத்தைக் கண்டிப்பதற்குப் பதிலாகத் தமிழர்கள் மீது கண்டனக் கணைகளை எழுப்புகிறார்கள். காரணம் ஆப்பிரிக்க நிற வெறியால் துன்புறுவோர் பெரும்பாலும் வடவர். ஈழத்திலே சிங்களரின் வெறிச்செயலுக்கு இரையாவோர் நூற்றுக்கு நூறு தமிழர்கள்—மார்வாரிகளோ மலையாளிகளோ அல்லர்—எனவேதான் பண்டிதர்கள் வாய் மூடி மௌனிகளாக இருக்கிறார்கள். அவர் தம் அடிநத்திப் பிழைக்கும் இராசாராம்கள் துள்ளிக் குதிக்கிறார்கள்.

– மணி

புரட்சிப் பாவலர்

தீட்டும்

"பிசிராந்தையார்"

உரைநடை நாடகம்

குயில் இதழ்தோறும் தொடரும்

எதிர்பார்க்க!

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6..75.	8...50.
ஆறுமாதம்	ரூ. 3—37.	4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 18 காசுக்குத் தபால் தலை அனுப்புக.

★

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு

முழுப்பக்கத்திற்கு ரூ. 100

அரைப்பக்கத்திற்கு ரூ. 50

கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக.

★

எழுத்தாளர்க்கு...

தமிழ், தமிழர், தமிழ்நாடு முன்னேற்றம் பற்றிய சீரிய கருத்துக்களைக் கொண்ட எளிய இனிய கவிதை கதை கட்டுரைகளை நம் குயிலுக்கு எழுதுக.

எழுதுவனவற்றைக் குயிலின் ஒருபக்க அளவிற்கு, அழகாகத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுக.

வெளியிடப் பெறுதனவற்றைத் திரும்பப் பெறப் போதிய அஞ்சற்றலைகள் அனுப்ப வேண்டும்.

★

விற்பனையாளர்க்கு...

விற்பனை விண்ணப்ப விதிகளில் கண்டுள்ள படி தேவையான இதழ்கட்குரிய முன்பணமின்றிக் "குயில்" இதழ்கள் அனுப்பப்பட மாட்டா.

கூடுதலான இதழ்கள் வேண்டுவோர் இதை நோக்கித் தேவையான இதழ்கட்குரிய முன்பணம் அனுப்புக.

விண்ணப்பத்தாள் பூர்த்தி செய்தனுப்பாமலும், அனுப்பிப் பணமனுப்பாமலும் இருப்போர்க்கு இதழ்கள் அனுப்பப்படுவதில்லை.

"குயில்" இதழ்கள் நன்ருகப் பார்வையிட்டே அனுப்பப்படுகின்றன. ஆகையால் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாக முடியாது.

குயிலகத்துக்கு அனுப்பும் தொகையைப் பணவிடை (M. O.) மூலம் மட்டுமே அனுப்பி அதன் இரசீதையும் அனுப்ப வேண்டும்.

செக்முதலாயின ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

★

அமைச்சர்,

குயிலகம் புதுச்சேரி.

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன் புதுச்சேரி.

அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.